TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8064807

1. District : மாவட்டம் Tiruneiveli PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 01/2020 Date: நாள் 02.01.2020

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 Sections பிரிவுகள்: 7 (a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் - Date from : நாள் முதல் 31.12.2018 11.15 hrs Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம்

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 02.01.2020 Time : நேரம் 16.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் VAO office, Naduvapatti 75 Km North West

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் C.SUBBARAJ@DURAI (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.CHELLASAMY

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 25.07.1965 (d) Nationality : நாட்டினம் INDIAN (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Farmer (g) Address : முகவரி 2/70, South Street, Myparai, Thiruvenkadam Taluk.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tmt.Abirami, Village Administrative Officer, Naduvapatti Village, Thiruvenkadam Taluk.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 02.01.2020-ம் தேதி மாலை 16.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது திரு.C.சுப்பாராஜ் என்ற துரைராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட நடுவப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் திருமதி.அபிராமி என்பவர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 02.01.2020-ம் தேதி மாலை 16.30 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.01/2020 u/s 7(a) of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 என வழக்குப் பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் C.சுப்பாராஜ் (எ) துரைராஜ், வயது 54, த/பெ. செல்லச்சாமி நாயக்கர், 2/70 தெற்கு தெரு, மைப்பாறை, திருவேங்கடம் தாலுக்கா, தென்காசி மாவட்டம். பெறுநர் உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருநெல்வேலி. ஐயா, நான் மேலே கண்ட முகவரியில் எனது சொந்த வீட்டில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு மைப்பாறை மற்றும் நடுவப்பட்டி கிராமங்களில் சொந்தமாக சுமார் 25 ஏக்கர் விவசாய பூமி உள்ளது. அதில் நான் விவசாயம் பார்த்து வருகிறேன். எனது தந்தை

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.

மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு C. சுப்பாராஜ் (எ) துரைராஜ்

Signature of the Officer In-charge, Police Station 2/1/2020
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

2/1/2020

Name: பெயர் ஜோ. கவிதாலட்சுமி
Rank: நிலை காவல் ஆய்வாளர்

பாட்டனார் பரம்பரை வழி சொத்தில் நடுவப்பட்டி கிராம சர்வே எண் 135-2A ல் இருந்து 3.88 ஏக்கர் விவசாய பூமி 1965ம் வருடத்தில் எனது தந்தை பங்குக்கு கிடைத்தது. அதை எனது தந்தை செல்லச்சாமி நாயக்கர் இருக்கும் வரையில் அவரது பராமரிப்பில் இருந்தது. எனது தந்தை இறந்த பிறகு நானும் எனது அம்மாவும் பராமரித்து வந்தோம். 1992ம் வருடத்தில் எனது அம்மா மாரியம்மாள் 3.88 ஏக்கர் நிலத்தில் ஆவண எண் 139/1992ன்படி மாரியப்ப தேவர் என்பவருக்கு 1 ஏக்கர் நிலத்தையும், ஆவண எண் 140/1992 ன்படி காளியப்ப தேவர் என்பவருக்கு 1 ஏக்கர் நிலத்தையும் விற்பனை செய்து விட்டார். அதில் மீதமுள்ள 1.88 ஏக்கர் நிலத்தில் நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் 1992க்கு பிறகு மேற்படி 1.88 ஏக்கர் நிலம் சம்மந்தமாக பட்டா மறுதல் எதுவும் செய்யவில்லை. எனது சித்தப்பா அவரது பங்குக்கு கிடைத்த விவசாய பூமியை கணேசத் தேவர் மனைவி காளியம்மாவிற்கு கடந்த 2002ல் விற்பனை செய்த பின்பு புல எண் 135-2A ஆனது 135-2A1, 135-2A2, 135-2A3 என சப்டிவிசன் ஆகிவிட்டது. எங்களிடம் இருந்து நிலம் வாங்கிய மாரியப்ப தேவர், காளியப்ப தேவர் ஆகிய இருவரும் 2007ல் கிருஷ்ணன் மகன் மூக்கையாவிற்கு விற்பனை செய்துவிட்டார்கள். அப்போது மூக்கையா பெற்ற பட்டா எண்.655ல் எனது தந்தையின் பெயரை செல்லசாமிநாயக்கர் என்பதற்கு பதில் சுப்பையாத்தேவர் என்று தவறாக குறிப்பிட்டுவிட்டனர். அதன்பின்பு மூக்கையா இறந்துவிட்ட காரணத்தால் அவரது மனைவி மற்றும் அவரது மகன் சேர்ந்து மேற்படி 2 ஏக்கர் இடத்தை மூக்கைய்யாவின் மூன்று மகள்களுக்கு தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துவிட்டார்கள். கடந்த 2019ம் ஆண்டு 9ம் மாதம் பட்டாவில் உள்ள எனது அப்பாவின் பெயரை சரிசெய்ய வேண்டியும், சப்டிவிசன் பிரிந்ததால் தனிபட்டா வாங்கிகொள்ளலாம் என்று ஆன்லைன் மூலம் மனுதாக்கல் செய்தேன். அதன்பின்பு திருவேங்கடம் மண்டலத்துணை வட்டாச்சியர் அவர்களின் உத்தரவுப்படி எனக்கும் பட்டா எண்.1016ன்படி பட்டா வந்தது. அதில் எனது தந்தை பெயர் செல்லச்சாமி நாயக்கர் என்று சரிசெய்யப்பட்டிருந்தது. ஆனால் தனிபட்டா கேட்ட எனக்கு கிருஷ்ணன் மகன் மூக்கைய்யா என்ற பெயரும் சேர்ந்து வந்திருந்தது. அதுபற்றி நடுவப்பட்டி வி.ஏ.ஓ. திருமதி.அபிராமியை பார்த்து கேட்ட போது அவர் மீண்டும் பட்டாவிலிருந்து மேற்படி கிருஷ்ணன் மகன் மூக்கைய்யா பெயர் நீக்கம் செய்து தனிப்பட்டா வழங்க மனுத்தாக்கல் செய்ய வேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் இதில் என் தவறு என்ன இருக்கிறது. நீங்கள்தானே மாற்றி கொடுத்திருக்கிறீர்கள் என்று கேட்ட போது, வி.ஏ.ஓ. திருமதி.அபிராமி அதெல்லாம் எனக்கு தெரியாது மீண்டும் பட்டாவில் பெயர் நீக்கம் செய்ய மனுதாக்கல் செய்ய வேண்டும் என்று உறுதியாக சொன்னதால் நான் கடந்த 14.11.2019ம் தேதி மேற்கூறிய மூக்கைய்யா பெயர் நீக்கி தனிப்பட்டா வேண்டி மீண்டும் ஆன்லைனில் பதிவு செய்தேன். அதன் பின்பு நடுவப்பட்டி வி.ஏ.ஓ. அபிராமியை சென்று பார்த்த போது அவர் மூக்கையாவின் மகள்கள் வந்து எழுதிகொடுத்தால்தான் பட்டா பெயர் நீக்கம் செய்ய அறிக்கை அனுப்புவேன் என்று சொன்னார்கள், நானும் சரி என்று சொல்லி மூக்கையாவின் மனைவி செல்லவமணியை பார்த்த போது அவர் தனது மகள்கள் வெளியூரில் இருக்கிறார்கள் கிருஸ்துமஸ்க்கு வருவார்கள் அப்போது பார்த்துக்கொள்ளாம் என்று கூறினார். நான் அவரிடம் எனது செல்போன் எண்ணை கொடுத்துவிட்டு வந்தேன். அதன் பின்பு கிருஸ்துமஸ்க்கு முன்பு செல்வமணியை சென்று பார்த்த போது மூக்கையாவின் இரண்டு மகள்கள் வந்திருந்தார்கள். நான் பட்டா தொடர்பான விபரங்களை அவர்களுக்கு சொன்னேன். அவர்கள் தங்களுக்கு இருக்கும் வேறு சொத்துக்களோடு பட்டா வாங்க கோவில்பட்டி தாலுகா ஆபிஸில் இசேவை மையம் மூலம் மனு கொடுத்திருப்பதாக சொன்னார்கள். அதற்கு நான் இந்த சொத்திற்கு இங்கு தான் மனு கொடுக்கவேண்டும் என்று

சொன்னேன். அவர்களும் நடுவப்பட்டி வி.ஏ.ஓ.வை பார்க்க வருகிறோம் என்று சொன்னார்கள். அதன்பின்பு நாங்கள் நடுவப்பட்டி வி.ஏ.ஓ. அபிராமியை பார்த்தோம். அவர் திருவேங்கடம் மண்டலத்துணை வட்டாட்சியரை பார்க்க அறிவுறுத்தியதின்பேரில் மண்டல துணை வட்டாட்சியரை பார்த்து பட்டா பெயர் நீக்கம் குறித்து கேட்டபோது அவர் இதில் ஒன்றும் பிரச்சணை இல்லை என்று சொல்லி அவரது செல்போன் எண்ணை கொடுத்து நீங்கள் வி.ஏ.ஓ அலுவலத்திற்கு சென்றுவிட்டு பேசுங்கள் நான் வி.ஏ.ஓவிடம் பேசுகிறேன் என்று சொன்னார். நானும் வி.ஏ.ஓ அலுவலகம் சென்று எனது செல்போனில் இருந்து வி.ஏ.ஓ துணை வட்டாட்சியரிடம் பேசிவிட்டு எங்களிடம் வாக்குமூலம் பதிவு செய்துவிட்டு, எங்களிடம் இருந்து ஆவணங்களின் நகல்களையும் வாங்கிக்கொண்டு நான் அறிக்கை அனுப்பிவிடுகிறேன் என்று சொன்னார். அதன்பின்பு பட்டா பெயர் நீக்கம் பற்றி வி.ஏ.ஓ. அபிராமியிடம் கேட்டபோது அவர் இன்று, நாளை என காலம் கடத்தி வந்தார். கடந்த 31.12.2019ம் தேதி வி.ஏ.ஓ திருமதி.அபிராமியை அவருடைய நடுவப்பட்டி கிராம அலுவலகத்தில் சுமார் 11.15 மணியளவில் பார்த்தபோது அவர் ரூ.10,000/- தந்தால்தான் பட்டா மாறுதலுக்கு அறிக்கை அனுப்புவேன் என்று சொன்னார். நான் ரொம்ப கஷ்டத்தில் உள்ளேன், பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் அதெல்லாம் எனக்கு தெரியாது ரூ.10,000/- தந்தால்தான் அறிக்கை அனுப்ப முடியும் என்று சொல்லிவிட்டார். நானும் வேறு வழியில்லாமல் சரி என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். நான் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்தபொழுது அரசுப்பணி செய்ய வேண்டியதற்கு ரூபாய் 10,000/- கேட்கிறார் என்று எனது மனம் கஷ்டப்பட்டது. அவருக்கு பணம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனக்கு வேலை இருந்ததால் இன்று 02.01.2020ம் தேதி இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். பட்டாவில் பெயர் நீக்கம் செய்து தனிப்பட்டா வழங்க அறிக்கை அனுப்ப என்னிடம் லஞ்சம் கேட்ட நடுவப்பட்டி வி.ஏ.ஓ திருமதி.அபிராமி மீது நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd.(சுப்பாராஜ்)02.01.2020.

Sir, Received the complaint on 2.1.2020 at 16.00 hrs and conducted confidential enquiry and registered a case in Tirunelveli V&AC Cr.No.01/2020 u/s 7(a) of PC Act, 1988 (as amended in) Act 16 of 2018 on 2.01.2020 at 16.30 hrs. sd.2.1.2020.R.Kavithalakshmi, Inspector of Police, V&AC, Tirunelveli.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

(signature) 2/1/2020

(ரா. கவிதலட்சுமி)
காவல் ஆய்வாளர்
ஊ.த (ம) க பிரிவு
திருநெல்வேலி.